DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No.01/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.16

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சத்தியசீலன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of November, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.06.2019 அன்று மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மற்றும் கண்காணிப்பு பிரிவில் துணைக்காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது கூடுதலாக விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் பொறுப்பினை கூடுதலாக பார்த்தேன். அப்போது மேற்படி பிரிவின் குற்ற எண் 06/2018 என்ற வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

மேற்படி கோப்பினை பார்வையிட விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகாவைச் சேர்ந்த சொக்கலிங்கபுரம் தவமணி என்பவரின் மகன் திரு. சோமசுந்தரன் அவர்களின் உரிமையாளர் மற்றும் ஒப்பந்ததாரரான சுப்பாரெட்டி என்பவரின் மேற்படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நேதாஜி நவீன எரி வாயு மயானத்திற்கு செல்லும் சாலையில் பேவர் பிளாக் பதித்த பணிக்காக 5 சதவீத கூடுதல் காப்புத்தொகை ரூ. 3,74,765/– யை மேற்படி நகராட்சியிலிருந்து

காசோலையாக விடுவிப்பதற்கு 1ம் எதிரி முத்து பொறுப்பு நகராட்சி ஆணையாளர் ரூ. 25,000/- யை கேட்டும், அதனை தனது அலுவலக கணக்கர் 2ம் எதிரி தியாகராஜன் மூலம் தனது அலுவலக அறையில் வைத்து 02.04.2018ம் தேதி பெற்றதாகவும், அது சம்பந்தமாக கைது செய்யப்பட்டதாகவும் காணப்பட்டது.

மேற்படி பொறி வைப்பு நடவடிக்கையை அப்போதைய ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்கள் மேற்கொண்டுள்ளார். மேலும் மேற்படி எதிரிகளை அப்போதைய காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. சீனிவாச பெருமாள் அவர்கள் கைது செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மேலும் அக்கோப்பினை மேல்விசாரணை மேற்கொண்ட சீனிவாச பெருமாள் அவர்கள் சாட்சிகள் சோமசுந்தரம், வனத்துரை, ஜஸ்டின் ஜெயக்குமார், சுப்பாரெட்டியார், ஜெதீஸ்வரி, காளீஸ்வரி, கிருஷ்ணகுமார், சுமதி, மாலதி, முகமது உசேன், காளிமுத்து, தர்மலிங்கம், மற்றும் எதிரிகள் 1, 2 யை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். மேற்கண்ட விசாரணை அதிகாரி பதவி உயர்வின் காரணமாக அப்பிரிவினை விட்டு செல்லும்போது மேற்கண்ட கோப்பினை சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் ரகுபதி அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு சென்றார்.

திரு.ரகுபதி அவர்கள் மேற்படி விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகளையும், மற்றும் சீனிவாச பெருமாள் அவர்கள், பாண்டியராஜன், விசாலாட்சி, ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து சீனிவாச பெருமாள் விசாரித்த சாட்சிகள் தவிர மற்றவர்களுக்கு வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

மேலும், மேற்படி சாட்சிகள் மற்றும் மேற்படி அதிகாரி சீனிவாச பெருமாள் அவர்கள் பெற்ற ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்து மேற்படி 1ம் எதிரி மேற்சொன்னவாறு வாதியிடம் ரூ. 25,000/- யை 2ம் எதிரி மூலம் பெற்ற குற்றச்செய்கைக்கு மேல்நடவடிக்கைக்காக இசைவாணை பெற தனது

அறிக்கையை 20.09.2018 அன்று இயக்குனர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சென்னை அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மேற்படி அறிக்கையின் பேரில் அப்போதைய நகராட்சி நிர்வாக ஆணையர் கார்த்திகேயன் அவர்களின் வேண்டுதலுக்கு இணங்க விசாரணை அதிகாரி திரு.ரகுபதி அவர்கள் இவ்வழக்கின் ஆவணங்களை 06.06.2019 அன்று இசைவாணை வழங்க நேரில் ஆஜராகி காண்பித்துள்ளார். மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஆவணங்களை பார்வையிட்ட பின்னர் மனத்திருப்தி அடைந்து மேற்படி எதிரிகள் மீது சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர 06.06.2019 அன்று இசைவாணையை வழங்கினார்.

மேற்படி இசைவாணை வழங்கியது சம்பந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கார்த்திகேயன் அவர்களை 09.08.2019 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விசாரணை அதிகாரிகள் விசாரித்த சாட்சிகள் மற்றும் எதிரிகளை தனித்தனியே விசாரித்தேன். ஏற்கனவே விசாரணை அதிகாரிகளிடம் சொன்ன விபரங்களையே என்னிடமும் தெரிவித்ததால் தனியாக நான் வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் பேரில் மேற்படி 1ம் எதிரி மேற்சொன்னவாறு லஞ்சப்பணம் ரூ. 25,000/- யை 2ம் எதிரியின் மூலம் கேட்டுப்பெற்று குற்றச்செய்கைக்கு ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 7, 13(2) r/w 13(1)(d)(i) ன்படியும் 2ம் எதிரி மேற்சொன்னவாறு எதிரி 1க்கு உடந்தையாகவும், லஞ்சப்பணம் என்று தெரிந்தும் வாதியிடம் இருந்து பெற்ற குற்றச்செய்கைக்கு ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 12 r/w 13(2) r/w 13(1)(d)(ii) ன்படியும் எனது இறுதி அறிக்கையினை தயார் செய்து கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மற்றும் சிறப்பு நீதிமன்றம், திருவில்லிபுத்தூரில் தாக்கல் செய்தேன்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எனது முந்தைய அதிகாரிகளும் நானும் சாட்சிகளை சொன்ன விதத்தில்

சொன்ன நேரத்தில் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இசைவாணை வழங்குவதற்கான கோரிக்கை எதுவும் விருதுநகர் பிரிவு அலுவலகத்திலிருந்து அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. இசைவாணை அசாஆ 1 ஆவணம் அசா 1 அவர்களால் தயார் செய்யப்படவில்லை என்றும், மேற்படி இயக்குனர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு மாதிரி இசைவாணை அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. அசா 1 அவரது மனநிலையை செலுத்தாமல் ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் மாதிரி இசைவாணையின் அடிப்படையில் அசாஆ 1 யை தயார் செய்து கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அசா 1க்கு ஆவணங்களை பார்வையிட ஆஜர் படுத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி 2ம் எதிரி மூலம் லஞ்ச பணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது என்றால் சரியல்ல.

அசா 2 சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர் சுப்பாரெட்டியாரிடம் பணிபுரிந்த வகைக்கும், ஒப்பந்தங்களை நிறைவேற்றிய வகைக்கும் என்னால் மற்றும் எனக்கு முன்பு விசாரித்த அதிகாரிகளும் ஆவணங்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. காப்புத்தொகையை திரும்ப வழங்குவது குறித்த நகராட்சியால் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவ்வாறு விசாரித்த வகைக்கு உரிய சாட்சியை சாட்சி பட்டியலில் காட்டவில்லை என்றால் சரியல்ல. அந்த நடைமுறைகளை காட்டும் விதமாக செயல்முறை உத்தரவுகளோ, அல்லது அறிக்கைகளோ கைப்பற்றப்பட்டதா என்றால் எனக்கு முந்தைய புலன்விசாரணை அதிகாரிகள் அதனை சேகரம் செய்துள்ளார்கள். அவ்வாறு சேகரம் செய்யப்பட்ட நடைமுறைகள் குற்ற இறுதியறிக்கையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியலில் காணப்படவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி நடைமுறைகள் பற்றி நானும் சரிவர விசாரிக்கவில்லை என்றால்

சரியல்ல. காப்புத்தொகை வழங்குவது சம்பந்தமாக பராமரிக்கப்படும் ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மேற்படி ஆவணத்தில் காப்புத்தொகை கோரி விண்ணப்பத்திருந்த ஒப்பந்தக்காரர்களில் புகார்தாரருக்கு முன்பாக விண்ணபித்து மூப்பு பட்டியலில் உள்ள ஒப்பந்தக்காரரை விசாரித்தேனா என்றால் ஆவணங்களை பார்வையிட்டேன். சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரை விசாரிக்கவில்லை.

புகார்தாரரின் கோரிக்கை சம்பந்தமாக அவருக்கு பரிகாரங்கள் கிடைத்துவிட்டதா என்பதை எங்களது புலன்விசாரணையின் போது விசாரிக்கவேண்டுமா என்றால் விசாரிக்கவேண்டும். இந்த வழக்கில் புகார்தாரரான அசா 2 க்கு காப்புத்தொகை வழக்கு நடவடிக்கை எடுத்த பிறகு எப்போது வழங்கப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவ்வாறு விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்களை நான் பதிவு செய்யவில்லை.

28.03.2018 ம் தேதி காலகட்டத்தில் நிதி ஆண்டு இறுதி என்பதால் காப்புத்தொகைகளை வழங்கிட இயலாது என்று சொன்னால் சரியல்ல. அப்போதைய அரசு மற்றும் நகராட்சி விதிகளின் படி 31.03.2018 முதல் அனைத்து நகராட்சிகளுக்குமான கருவூல கணக்குகளை இயக்கும் மென்தளங்கள் மற்றும் அலுவலகங்கள் நிறுத்தப்படும் என்றும், அதனால் பணப்பட்டுவாடா வழங்கப்படமுடியாது என்றால் சரியல்ல. மீண்டும் மேற்படி வரவு செலவிற்கான வலைதள செயல்பாடுகள் 05.04.2018 முதல் தான் இயங்கியது என்றால் சரியல்ல. அருப்புக்கோட்டை நகராட்சியில் சிசிடிவி இணைப்புகள் அந்த காலகட்டத்தில் அமைக்கப்பட்டிருந்ததா என்பதை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் சிசிடிவி இணைப்புகள் கண்டிப்பாக பொருத்தப்படவேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும்.

சிசிடிவி இணைப்புகள் அந்த காலகட்டத்தில் அருப்புக்கோட்டை நகராட்சியில் அமைக்கப்பட்டிருந்தது என்றும், பொறி வைப்பு நடவடிக்கை முடிவடைந்த பின்னர் ஆய்வாளர் பூமிநாதன் விதிமுறைகளுக்கு புறம்பாக மேற்படி இணைப்புகளை எடுத்துச்சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சிசிடிவி பதிவுகள் முக்கியமான தடயம் என்றும் அவற்றை நாங்கள் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி சிசிடிவி பதிவுகளில் கைப்பற்றுதல் மகஜரில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு முரணாக இருந்தது என்றும் அதனால் அவற்றை மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

அசாஆ 1 ல் கூறப்பட்டுள்ள வாக்கியங்களும் வாசகங்களும் இறுதி அறிக்கையின் கூறப்பட்டு வாசகங்களும் ஒன்று போல் உள்ளன என்றால் சரியல்ல. அசாஆ 1ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக அதிகாரிகளின் சுருக்கு கையொப்பமோ அலுவலக முத்திரையோ காணப்படவில்லை என்றால் அனுப்பநர் என்ற இடத்தில் விலாசம் உள்ளது. அசாஆ 1யை அசா 1 அனுப்பியதற்கு ஊழல் தடுப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிய முகப்பு கடிதம் அசாஆ 1ல் இல்லை. ஆனால் ஊழல் தடுப்பு இயக்குநர் பிரிவு அலுவலகத்தில் இருக்கும். அசா 1 யை நான் விசாரிக்கும்போது முகப்பு கடிதத்துடன் அனுப்பியதாக என்னிடம் தெரிவித்தார். ஆனால் அதனை நான் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு பதிவு செய்யவில்லை. அசாஆ 1 ஆவணம் அசா 1 ஆல் தயார் செய்து அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல.

முந்தைய புலன்விசாரணை அதிகாரிகளின் புலன்விசாரணையை சரிவர மேற்பார்வை செய்யாமல் ஒரு தலைபட்சமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

17.06.2019ம் தேதி அன்று தான் இவ்வழக்கு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். 17.06.2019க்கு பின்னர் நான் அசா 1 நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை விசாரித்தேன். அசா 1 வழங்கிய

இசைவாணையில் மேற்படி நகராட்சி ஆணையர் அவர்கள் 2ம் எதிரிக்கு எதிராக ஏற்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நான் மனதிருப்தியுற்றுதான் இசைவாணை வழங்கினேன் என்ற வாசகம் அசாஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மேற்படி வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அசா 1 வழங்கிய இசைவாணையில் அசா 1 எந்த எந்த ஆவணங்களை பார்வையிட்டு 2ம் எதிரிக்கு எதிராக இசைவாணை கொடுத்துள்ளார் என்பதை குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. பொதுவாக ஆவணங்களை பார்வையிட்டதாக சொல்லியுள்ளார்.

இந்த வழக்கில் 2ம் எதிரிக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு எந்தவிதமான அடிப்படை முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சட்டப்படி விசாரித்திருந்தாலும், ஆவணங்களை பார்வையிட்டால் 2ம் எதிரிக்கு எதிராக குற்ற வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு அவசர கதியில் சரிவர விசாரணை செய்யாமலும் ஆவணங்களை பார்வையிடாமலும் 2ம் எதிரிக்கு எதிராக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.